சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **102 / 2020**

பெயர்: வீராசாமி பி.வா.சா. 1 தேதி **07.03.2026**

ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நீதிமன்றம் விதிக்கும் உத்தரவை ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகள் நிறைவேற்ற தயாராக உள்ளார்கள்.

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனக்கும், வாதிகளுக்கும் இந்த வழக்கை தவிர மற்றொரு வழக்கும் உள்ளது. மேற்படி வழக்குமே பாகப்பிரிவினை வழக்கு தான். இந்த வழக்கானது என்ன பரிகாரத்திற்காக போடப்பட்டுள்ளது என்றால் பாகப்பிரிவினைக்காக போடப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையை படித்து பார்த்தேன். இவ்வழக்கானது வாரிசு விபரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்து தான் போட்டேன். இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வம்சாவளி பட்டியலை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதில் உள்ள விவரம் சரியானது என்றால் இல்லை. வாதிகள் தாக்கல் செய்துள்ள வம்சாவளி பட்டியல் தவறு என்றும், நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மற்றொரு வழக்கானது அ.வ.19/2015 வழக்கில் கண்டுள்ள சொத்தானது மாமூண்டி கவுண்டருக்கு பூர்விக சொத்தா என்றால் பூர்விக சொத்தும் உள்ளது சுயசம்பாத்திய சொத்தும் உள்ளது. எனது தகப்பனார் 2007ம் ஆண்டு இறந்துபோனார். எனது தகப்பனார் இறந்ததில் இருந்து நாளது தேதி வரை பட்டா மாறாமல் எனது தகப்பனார் பெயரில் உள்ளது என்றால் தற்பொழுது மாறிவிட்டது. மோசடி நடந்ததால் மாற்றிவிட்டேன். பட்டா மாற்றம் செய்வதற்கு இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் அவசியம் என்று சொன்னால் இறப்பு சான்றிதழ் கேட்டேன் வாதிகள் கொடுக்க மறுத்துவிட்டார்கள். நாளது தேதிவரை வாரிசு சான்றிதழ் வாங்கவில்லை. இறப்பு சான்றிதழ் கேட்டு வழக்கிற்கு முன்னர் வாதிகளுக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான்.

2. இறப்பு சான்றிதழ் என்பது பொதுவான ஆவணம் என்றாலும், யார் வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம் என்றால் சரியல்ல. வாதிகள் வாரிசு சான்றிதழ் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. மேற்படி வருவாய்துறையினர் வாதிகள் கொடுத்த மனுவின் அடிப்படையில் விசாரணை செய்தார்களா என்றால் சரிதான். மேற்படி நடவடிக்கையில் எனது தாயாரையும் மாமூண்டி கவுண்டர் திருமணம் செய்துள்ளார் என சொல்லி வாரிசு சான்றிதழ் கொடுக்கக்கூடாது

என ஆட்சேபணை செய்தேனா என்றால் இல்லை. வாதிகளின் தாயார் தான் மாமூண்டி கவுண்டரின் சட்டப்பூர்வமான மனைவி என்றால் சரியல்ல. எனது தாயாரை மாமூண்டி கவுண்டர் திருமணம் செய்யவில்லை என்றாலும், எனது தாயார் மாமூண்டி கவுண்டரின் சட்டப்பூர்வமான மனைவி இல்லை என்றால் சரியல்ல. எனது தாயார் மாமூண்டி கவுண்டரின் சட்டப்பூர்வமான மனைவி இல்லை என்பதால் தான் எங்கள் தரப்பில் வாரிசு சான்றிதழ் கோரவில்லை என்றால் சரியல்ல. உண்மையை சொல்லி வாதிகள் தரப்பில் வருவாய்துறையிடம் வாரிசு சான்றிதழ் வாங்க நாங்கள் தடையாக உள்ளோம் என்றால் சரியல்ல. மாமூண்டி கவுண்டருக்கு இரண்டு மனைவிகள் இருப்பதாக தவறாக தகவல் கொடுத்தன் அடிப்படையில் தான் வருவாய் துறையினர் நீதிமன்ற மூலம் பரிகாரம் கோரிக்கொள்ளும் படி கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

3. வாதிகளின் தாயார் மாமூண்டி கவுண்டரின் சட்டப்பூர்வமான மனைவி என்கின்ற சங்கதியை நாங்கள் எங்களது எதிர்வழக்குரையில் ஒப்புக்கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. உண்மையிலேயே எங்களது தாயாரை மாமூண்டி கவுண்டர் திருமணம் செய்திருந்தால் தேதி, மாதத்தை குறிப்பிட்டு இருப்போம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எனது தகப்பனாருக்கு கிரக தோசம், தாரதோசம் இருந்த காரணத்தினால் எனது தாயாரையும், வாதிகளின் தாயாரையும் ஒரே மேடையில் வைத்து திருமணம் செய்ததாக பொய்யாக கூறியுளேன் என்றால் சரியல்ல. வாரிசு சான்றிதழ் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் எதிர்வழக்குரை மற்றும் வாக்குமூலத்தில் சொத்து சம்மந்தமாக தேவையில்லாத சங்கதியை தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி சொத்து சம்மந்தமாக தாக்கல் செய்த வழக்கில் வாதி தக்கமுறையில் எதிர்கொண்டு வழக்கை நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு எவ்விதத்திலும் சட்டப்பூர்வமான பாகமும் கிடைத்து விடக்கூடாது என்பதற்காக பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வம்சாவளி பட்டியல் மற்றும் வழக்குரையில் வாரிசு செட்டியூல் கண்டுள்ள உறவு முறைகளும் உண்மையானது என்றால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN Digitally signed by MUTHUSAMY ESWARAN Date: 2026.03.07 15:55:43 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.